ARAN International e-Journal of Tamil Research

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

(Peer Reviewed Journal Multidisciplinary)

ISSN: 2582-399X



காலாண்டு இதழ்
(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)
ஆகிய மாதங்களில் வெளிவரும்

Vol:8 Issue :31 July 2026

கோட்டை:8 வாயில்:31 ஜூலை 2026

அரண்
பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran
International e Journal of Tamil Research

EDITORIAL BOARD

Founder / Editor in Chief
Dr PRIYAKRISHNAN

Publisher
MR P. JAYAKRISHNAN

Editorial Board Members
Dr V SELVAKUMAR
Professor And Head of The Department of Maritime History and Marine Archaeology Tamil University, Thanjavur, TamilNadu, India

Dr. Ravindran A/L Maraya
Head of Department & Senior Lecturer, Department of Indian Studies (DIS), Universiti Malaya, Kuala Lumpur, Malaysia.

Dr Sillllalee A/L S.Kandasamy
Senior Lecturer, Department of Indian Studies, Universiti Malaya,

Dr. S. KAVITHA
School of Indian Languages and Comparative Literature,Tamil University, Thanjavur. TamilNadu, India

Dr.K.DAYANIDHI
Assistant Professor & Head i/c , Department of Vaishnavism , University of Madras, TamilNadu, India.

Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research

EDITORIAL BOARD

Dr O.MUTHIAH

Professor of Tamil, The Gandhigram Rural Institute (Deemed to be University)
Gandhigram - 624 302 Dindigul District, TAMIL NADU

DR UMADEVI

Professor In Tamil, Department of Modern Indian Languages And
Literery Studies University of Delhi,Delhi.

DR JAGADEESAN.T.

Assistant Professor of Tamil, Department of Indian Languages,
Faculty of Arts, Banaras Hindu University,
Varanasi- 221005, Uttar Pradesh,India.

DR SENTHIL PRAKASH.S

Teacher – in- charge/Assistant professor (SG),Department of
Tamil, Institute of Languages, Literature& culture,
Visva – Bharathi University,Santiniketan,West
Bengal, India -731235

DR R TAMILSELVAN

Assistant professor, Aligarh Muslim University, Uttar Pradesh,India-202002

Dr SWARNAVEL ESWARAN

Associate Professor Departments of English, and Media and Information
Michigan State University. USA.

Dr (Ms.) NILANKA LIYANAGE

Senior Lecturer in Dance ,Department of Dance,Drame&Theatre Arts,
Swamy Vipulananda Institute of Aesthetic Stidies,
Eastern University Srilanka

அரண்

Aran

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

International e Journal of Tamil Research

EDITORIAL BOARD

Mrs THULSIVANTHANA UDAYASHANKAR

Senior lecturer Gr II in English, Swamy Vipulananda Institute of Aesthetic Stidies ,Eastern University, Srilanka

Dr B. DHANANJAYAN

Associate Professor, Sir Theagaraya College, Old Washermenpet, Chennai - 600 021.

Dr P.SEKAR

Assistant Professor,Department of Education,Govt.Institute of Advanced Study in Education,Saidapet,Chennai-600015.

நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்

இதழாக்கம்

திரு ப. ஜெயகிருஷ்ணன்

முதன்மை ஆசிரியர்

முனைவர் பிரியாகிருஷ்ணன்

+917299587879

www.aranejournal.com

aranjournal@gmail.com

அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மானிடவியல்
நாட்டுப்புறவியல்

உடையார் இன மக்களின் பழக்கவழக்கமும் பண்பாடும்

The Customs and Culture of the Udayar Community

த.திவ்யா,தமிழ் முனைவர் பட்ட ஆய்வாளர், பதிவு எண்: 20PHTMP002, தமிழ்த்துறை, அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம், கோயம்புத்தூர், தமிழ்நாடு, இந்தியா.

முனைவர் த. நாகம்மாள்,உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம், கோயம்புத்தூர், தமிழ்நாடு, இந்தியா.

D.Divya,Research Scholar of Tamil, Reg.No: 20PHTMP002,Avinashilingam Institute for Home Science and Higher Education for Women, Coimbatore, Tamil Nadu, India.

ORCiD:https://orcid.org/0000-0002-2648-6710

Dr.T.Nagammal,Assistant Professor of Tamil, Avinashilingam Institute for Home Science and Higher Education for Women, Coimbatore, Tamil Nadu, India. ORCiD:https://orcid.org/0009-0001-5677-2267

Abstract

The term "customs and habits" is formed by the combination of two words: habit and custom. The word habit refers to practice, learning, or repeated behavior. It denotes an individual's pattern of conduct or actions developed through continuous practice. The word custom refers to practices that are traditionally followed and passed down from generation to generation. In Tamil grammar and literary traditions, it is explained as a practice that is continuously observed and transmitted over time. Thus, customs represent the collective traditions that a society follows consistently across generations.

A habit is essentially a learned behavior. An action that initially requires conscious effort gradually becomes automatic through repeated practice. It is on this foundation of learning through habit that an individual's ability to acquire knowledge and skills develops. Therefore, parents and teachers should instill good values, character, and healthy habits in children from an early age. As expressed in the Tamil proverb, "The habit formed in the cradle lasts until the grave," the habits cultivated during childhood become deeply rooted and

eventually become an inseparable part of a person's life without the need for further instruction.

Keywords: *Pottery, customs and traditions, food, clothing, shelter, agriculture.*

ஆய்வுச்சுருக்கம்

பழக்கவழக்கம் என்ற சொற்றொடரானது பழக்கம் வழக்கம் என்ற இரு கூட்டுறவால் ஏற்பட்ட சொல்லாகும். பழக்கம் என்றால் பழகுதல் அல்லது பயிற்சி காதல் என்று பொருள் தரும் ஒரு தனி மனிதனின் நடத்தை செயல்முறையை உணர்த்துவதாக அமைகின்றது வழிவழியாக பின்பற்றி வழங்கி வருதல் என்று விளக்கத்தினை தமிழ் இலக்கண இலக்கியங்களில் கையாளப் பட்டுள்ளன. சமுதாயத்தின் இடையின்றி வழிவழியாகத் தொடர்ந்து பின்பற்றி ஒரு நிலையினை வெளிப்படையாக உணர்த்துவதாக அமைந்துள்ளது.

பழக்கம் என்பது கற்கும் செயலாகும் நினைவுடன் செயல்படத் தொடங்கிய செயலானது நாளடைவில் நினைவின்றி தொடர்ந்து செய்யும் செயல் முறையை பழக்கமாகும். கற்கும் செயலை பழக்கம் என்று கூறும் அடிப்படையில்தான் ஒரு தனிமனிதனின் கற்கும் திறன் அதிகரிக்கும் குழந்தை பருவத்திலேயே நல்ல குண பண்புகளையும் பழக்க வழக்கங்களையும் குழந்தைகளுக்கு ஆசிரியர்களும் பெற்றோர்களும் போதிக்க வேண்டும். தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும் என்ற நம் முன்னோர்களின் பழமொழிக்கேற்ப குழந்தைப் பருவத்திலிருந்து கற்றுதரும் பழக்கமானது நாளடைவில் வளர்ந்தபின் கற்றுத் தராமல் தன் வாழ்நாளின் வழக்கமாக அமைகிறது எனலாம்.

கருவிச் சொற்கள்: மண்பாண்ட கலைகள், பழக்கம் வழக்கம், உணவு, உடை, இருப்பிடம், வேளாண்மை

முன்னுரை

மனிதன் இயற்கைக்கு எதிரான சில அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சி மற்றும் செயற்கை மாற்றங்களை உருவாக்கியதன் விளைவாக பல்வேறு அழிவுகளையும், உலகம் வெப்பமயமாதலையும் சந்தித்து வருகிறான். கைவினை கலைகளுள் மண்பாண்ட தொழிலானது மூத்த முதன்மை பெற்ற தொழிலாக விளங்குகிறது. தற்போதைய நவீன காலத்தில் கீழடிகளில் கண்டெடுக்கப்படும் மண்பாண்டங்களில் தமிழர்களின் குறியீடுகள் காணப்படுவதன் அடிப்படை உடையார் இன மக்களின் அடையாளம் எனலாம். உலோகங்கள் உருவாவதற்கு முந்தைய காலகட்டத்தில் முதன்முதலில் தமிழர் மரபின் முதல் மூத்த குடி பாண்டமாக மண்பாண்டம் விளங்கியது. நம் முன்னோர்களின் மரபு வழிகேட்ப பயன்படுத்திய புழங்கும் பொருட்கள் பழக்கவழக்கங்கள் உணவு உடை இருப்பிடம் கைவினைப் பொருட்கள் கலைகள் என பலதரப்பட்ட வாழ்வியல் குறித்து இக்கட்டுரை கள ஆய்வின் மூலம் சில தகவல்களை எடுத்துரைக்கிறது.

உடையார் வரலாறு

உடையார் இன மக்கள் தமிழ்நாட்டில் அதிக அளவில் மண்பாண்ட தொழில் செய்யும் இனத்தார் என்ற அடிப்படையில் தமிழ்நாடு சாதிகள் பட்டியலில் படுத்தப்பட்டார் என்ற பட்டியலின் கீழ் இடம் பெற்றுள்ளனர். குலாலர் என்றழைக்கப்படும் இவ்வின மக்கள் தமிழ்

மற்றும் தெலுங்கு என இரு வேறுபட்ட மொழியினை கொண்ட குழுக்களாக வாழ்கின்றனர் தமிழகத்தில் மட்டும் சுமார் 3 லட்சத்து ஆயிரத்து 179 பேர் வசிக்கின்றனர் என கணக்கீடுகள் உள்ளன.

மண்பாண்டம் கல் தோன்றி மண் தோன்றிய காலம் தொட்டு சமுதாயம் நலம் பயக்கும் நல்லுணவுகளை சமைப்பதற்கும் ஆரோக்கியத்தோடு வாழவும் மண்ணாலான பாண்டங்களையும் வீடு கட்டுவதற்கு ஓடு, செங்கல் போன்றவற்றையும் உருவாக்கித் தந்தனர். குயவர் என்பவர் மண்ணினை முதன்மையான ஆதாரமாகக் கொண்டு மண்ணாலான பொருள்களைச் செய்பவராகவும், மண்பாண்ட தொழிலை இனத்தின் அடையாளமாகவும் கொண்டிருக்கின்றனர். சுழலும் சக்கரத்தின் கொண்டு மண்ணாலான மண்பானை சட்டி, மண் விநாயகர் , தெய்வ உருவங்கள், கார்த்திகை விளக்கு போன்ற பல பொருட்களை குயவர்கள் வடிவமைக்கின்றனர்.

கோவில் அர்ச்சகர்களாக பணிபுரிந்து மக்கள் நலன்களைப் பேணிக் காத்தனர். குலாலர்கள் கவிப்பேரரசர் கம்பரே உலக மொழிகளிலே உயர்ந்த மொழி தொன்மை வாய்ந்த மொழி தமிழ் மொழிதான் என்று போற்றுகிறார். அத்தகைய தமிழ் மொழியை படைத்தவன்

குல சமூகத்தில்தோன்றிய கும்பமுனி அகஸ்தியர். புறநானூற்றில் புகழ் பெற்ற குலால பெண்மணி வெண்ணியக் குயத்தியார், குலாலர் சரித்திரம் படைத்த சாலிவாகனன், விக்ரமாதித்த அரசனை வீழ்த்தி ஐம்பத்தாறு தேசங்களையும் ஒரு குடையின் கீழ் ஆண்ட ஏக சக்கரவர்த்தியான சாலிவாகனனின் சகாப்தத்தை ஏற்படுத்திய மாவீரன் சாலிவாகனன் குலாலர் சமுதாயத்தை சேர்ந்தவன் ஆவான். (லட்சுமி, வயது 74, தாராபுரம், திருப்பூர்).

ஏறி தொண்டிலும் பக்தி துறையிலும் பலவகை சாதனைகளை புரிந்த அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவரான திருநீலகண்ட நாயனாரும், கோரக் குல்பானரும், கூபாகும்பாரையும், மாயாண்டி சுவாமிகள் போன்ற பல புகழ்பெற்ற அடியார்களும் தமிழ் வளர்த்தப் பெரியோர்களும் குலால சமூகத்தை சேர்ந்தவர்கள் என்பதை பெருமிதம் ஆகும். கோ, கொசவன், குயவன், கும்பகாரன், வேலார், செட்டியார், தண்டதரன், தளையன், மண்ணுடையார், மட்பகைவன், மடன் கூட்டாளன், மண் மகன், மண்ணு, மிருத்து கரன், வேட்கோ, கலந்துருநன், குலாலா, பூசாரி, பண்டுரை, பாட்டக்காரர், ஓசிரையர், சாலியர், சோலியர், மண்ணையர், சேரமா, ஆன குலால கோலப்பர் எனப் பல்வேறு பெயர்கள் உண்டு.

தமிழ், தெலுங்கு உள்ளிட்ட மொழிகளிலும் நில வாழ்வின் அடிப்படையில் பல துணைப் பிரிவாக உள்ள குயவர்கள் அன்றைய காலகட்டத்தில் சமுதாயத்தில் உயர்ந்த அங்கீகாரத்தை உடையவர்களாக இருந்தார்கள் என்று அறிய முடிகிறது. குயவர்கள் மண்பாண்டங்களை தயாரிப்பதோடு மட்டுமின்றி அதனை மற்ற இடங்களுக்கும் கொண்டு சென்று விற்பனை செய்யும் வணிகத்திலும் ஈடுபட்டனர். மண்ணினை மூலமாகவும், தொழிலை அடிப்படையாகவும் கொண்டு இவ்வின மக்கள் தங்களுக்கென சில வரை முறைகளையும் பழக்கவழக்கங்களையும் அமைத்துக்கொண்டனர்.

உடையார் இன மக்கள் தொகை

தமிழகத்தில் உடையார் இன மக்கள் 3 லட்சத்து ஆயிரத்து 173 பேர் வசிக்கின்றனர். திருப்பூர் மாவட்டத்தில் மட்டுமே 20 சதவீத மக்கள் வசிக்கின்றனர். கருவம்பாளையம், பழைய பேருந்து நிலையம், வளர்மதி நிலையம், கோட்டை மாரியம்மன் கோவில் வீதி போன்ற பகுதிகளில் 10 சதவீத மக்கள் வசிக்கின்றனர். ஒரே சில பகுதியில் இவ்வின

மக்கள் ஒரே குழுவாக வசிக்கின்றனர். அனுப்புர்பாளையம், பூண்டி, மேட்டுப்பாளையம், காலேஜ் ரோடு, ரயில் நிலையம் போன்ற பகுதிகளில் 10 சதவீதம் மக்கள் வசிக்கின்றனர். ஒரே பகுதியில் ஒரு குழுவாக இவ்வினத்தார் ஒரு சில பகுதிகளில் மட்டுமே வசிக்கின்றனர் மண்பாண்டங்களை விற்பனை செய்வதற்கு ஒரே இடத்தில் ஒன்று கூடி வணிகம் செய்கின்றனர் 20 சதவீத உடையார் இன மக்களின் முந்தைய மற்றும் பிந்தைய தலைமுறையின் பிறப்பிடமாகவும் திருப்பூர் மாவட்டம் விளங்குகிறது. (திருப்பூர் மாநகராட்சி, 05.03.2024)

உணவு சார்ந்த பழக்கவழக்கங்கள்

மக்களின் உணவு முறை பற்றிய குறிப்புகள் பல்வேறு இலக்கியங்களில் இடம்பெற்றுள்ளன அவற்றுள் முதன்மையான உணவுகளாக சோறு அல்லது சாதம் கஞ்சி கூழ் களி முதலியன அடங்கும்.

தெய்வம் உணாவே மாமரம்

புட்பறை செய்தி யாழின்

பகுதியோடு தொகைஇ அவ்வகை

பிறவும் கருவென மொழிப

(தொல் .அகத்திணையியல் 30)

என்ற பாடல் அடிகளின் மூலம் உணவானது தெய்வத்திற்கு அடுத்த நிலையில் கருதப்படுகிறது என்பதை உணரமுடிகிறது. பண்டைய தமிழர்கள் சுவையான ஆரோக்கியமான உணவு உண்பதில் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தனர். மக்கள் அவரவர் வாழ்ந்த நிலத்திற்கேற்ப உணவு முறையானது மாறுப்பட்டது. பலதரப்பட்ட நிலங்களில் வாழும் மக்களில் பொருளாதாரம் மற்றும் பருவ நிலைக்கு ஏற்பவும் உணவானது மாறுபட்டன.

ஆதிகாலம் தொட்டு மக்கள் இன்று வரை மண்பாண்டங்களை பயன்படுத்தி வருகின்றனர். இன்றைய காலகட்டத்தில் உணவுகளை பல்வேறு தொழில்நுட்பங்கள் வளர்ந்து இருப்பினும் உடையார் இனத்தைச் சேர்ந்த மக்கள் களிமண்ணால் செய்யப்பட்ட பானைகளில் உணவுகளைப் பதப்படுத்துகின்றனர். மண்பாண்டங்களில் பதப்படுத்திய உணவுகளை உட்கொள்வதால் ஆரோக்கியம் கிடைக்கிறது. மண்பாண்டங்களில் சமைத்தோ அல்லது பதப்படுத்தி உட்கொள்ளப்படும் உணவில் ஆரோக்கியம் நிறைந்துள்ளது என்பது இன்றைய அறிவியல் வல்லுநர்கள் மற்றும் மருத்துவர்களாலும் நிரூபிக்கப்பட்டுள்ளது.

ஆரோக்கியம் நிறைந்த மண்பாண்டங்களை செய்யும் உடையார் இன மக்கள் தங்களது நிலப் பகுதிகளில் விளையும் பயிர்கள் மற்றும் விளைச்சலை உணவு முறையாக கொண்டுள்ளனர். அதுமட்டுமின்றி பிறப்பு முதல் இறப்பு வரை உள்ள மனித வாழ்வின் ஒவ்வொரு பருவங்களிலும் கட்டாயமாக சில உணவுகளை உட்கொள்ளும் பழக்கத்தை கொண்டுள்ளனர். இரண்டு வயதுக்கு மேற்பட்ட குழந்தைகளுக்கு கேழ்வரகு, கம்பு, சோளம், கோதுமை போன்ற தானியங்களை ஒன்றாக அரைத்து கஞ்சியாக சமைத்து வாரத்தில் மூன்று முறை ஊட்டச்சத்து உணவாக வழங்குவது கட்டாயமாக உணவு முறையாக கடைபிடிக்கப்படுகிறது. வார நாட்களான புதன் மற்றும் ஞாயிற்றுக்கிழமை மட்டுமே மீன் இறைச்சி, கோழி மற்றும் ஆடு போன்ற அசைவ உணவுகளை உண்பர்.

இவ்வின மக்கள் இன்றுவரை மண்பாண்டங்களில் கஞ்சி வடிக்கும் அசைவ உணவுகளை சமைத்து உண்பதில் பெரும் விருப்பம் உடையவர்களாகவே விளங்குகின்றனர். குழந்தை பருவம் மற்றும் பெண் குழந்தைகள் பூப்பு அடைந்த பின் உதிரப்போக்கு அதிகம் ஏற்பட கூடாது என்பதற்காகவும் உடல் சோர்வினை குறைக்கவும் பச்சை முட்டை, கருப்பட்டி, நல்லெண்ணெய் போன்றவைகளை உணவில் அதிகம் சேர்த்துக் கொடுத்தனர். இவர்கள் அசைவம் மற்றும் சைவம் இரண்டினையும் கலந்து உண்ணும் வழக்கத்தினை கொண்டிருப்பவர்கள் ஆக இருப்பதால் இரண்டும் கலந்த உணவையே பூப்படைந்த பெண்ணிற்கு வழங்குவார்கள். பாசிப்பயிறு பொங்கல் தருவதோடு பூப்பெய்திய நாளிலிருந்து சரியாக ஏழு நாட்கள் காலையில் வெறும் வயிற்றில் நாட்டுக்கோழி முட்டை வறுத்து, உளுந்து மாவு களி, நல்லெண்ணெய் கொடுக்கின்றனர். தினமும் ஒரு உறவினர் என்ற விதத்தில் புட்டு ,இட்லி, வடை, சிறுதானிய உணவு வகைகள் போன்ற பலகாரங்களுடன் பூப்பெய்திய பெண்ணின் உடல் வலிமை பெறுவதற்கு அசைவ உணவுகளையும் அப்பெண்ணின் உறவினர்கள் வீடு தேடி வந்து தருகின்ற தரும் வழக்கம் இன்றும் இவ்வினத்தாரிடம் காணமுடிகிறது. (லட்சுமி, வயது 70, தாராபுரம், திருப்பூர்).

வேளாண்மை

மண்பாண்டங்கள் செய்வதனை முதன்மைத் தொழிலாகக் கொண்டிருந்த உடையார்கள் தங்களிடையே சொந்தமாக நிலம் இருந்தால் அதில் பயிர் செய்யும் முறையையும் அறிந்திருந்தனர். தங்களது உணவுகளை சில கால பருவ நிலைகளுக்கேற்ப தாங்களை பயிர் செய்து கொண்டனர். தட்டைபயிறு, கொள்ளு பயிறு, துவரை போன்ற பயிறு வகைகளையும் புடலங்காய், பீர்க்கங்காய் போன்ற கொடியில் வளரும் காய்கறிகளை பயிரிட்டு உண்டனர். மசாலா மற்றும் பாஸ்ட் புட் என்றழைக்கப்படும் உணவு முறைகளை பெருகிவிட்ட இன்றைய காலகட்டத்திலும் பாரம்பரியம் மாறாமல் மண்பாண்டங்களில் பழைய சோற்றினை மறுநாள் மிளகாயுடன் உண்ணும் வழக்கத்தை கொண்டுள்ளனர். இவ்வுணவு கோடை காலங்களில் உடலுக்குக் குளிர்ச்சியை தருவதோடு நோய் எதிர்ப்பு சக்தியையும் உருவாக்கி விட்டன என ஆராய்ச்சியாளர்கள் மட்டுமின்றி அதனை மக்களும் நம்புகின்றனர்.

சோளம், கம்பு மற்றும் பயிர் வகைகளை தினசரி உணவாக கொண்டு வந்த உடையார் இன மக்கள் வருடத்திற்கு ஒருமுறை அல்லது திருவிழா, திருமணம் போன்ற பண்டிகை காலங்களில் மட்டும் நெல் அரிசி உணவை உண்ணும் வழக்கத்தைக் கொண்டிருந்தனர்.

திருமணத்தின்போது மொச்சை பயிறு குழம்புடன் நெல் அரிசி சோறு மற்றும் பயிறு வகைகள் திருமண விருந்தாக உணவிடுவார்கள். விழாகால உணவு முறைகள் மட்டுமின்றி மருத்துவ காலங்களிலும் பத்திய உணவு முறைகள் பின்பற்றப்பட்டு வந்தன. குறிப்பாகப் பிள்ளைப் பேறு பெற்ற பெண் பிரசவத்திற்கு பின் உடல் வலிமையோடு இருக்க வேண்டும் என சில உணவு முறைகளைக் கையாண்டனர்.

ராகிகளி, சுக்கு, மிளகு ஆகியவற்றை அடிக்கடி சாப்பிட்டால் பிரசவத்திற்கு பின் பெண்ணின் உடல் சோர்வு நீங்கும் வெள்ளைப் பூண்டு ரசம் சாப்பிட்டால் உடல் பலம் பெறும் என பல வீட்டு உணவு முறைகளில் உடல் ஆரோக்கியத்தை கவனமாக கையாண்டு வந்தனர். இவ்வின மக்கள் அந்தந்த காலத்திற்கு ஏற்பவும் சூழ்நிலைக்கு ஏற்ப புதிய உணவு வகைகளில் ஏற்படும் மாற்றங்களை ஏற்றுப் போற்றியுள்ளனர்.

உடை சார்ந்த பழக்க வழக்கங்கள்

ஆடையில்லா மனிதன் அரை மனிதன் என்னும் பழமொழிக்கேற்ப ஆடையின் சிறப்பை உலகிற்கு உணர்த்துகிறது. பழங்காலத்து மனிதன் ஆடை அணியக் கற்றுக் கொள்வதால் மரக்கிளைகள் பட்டைகளை உரித்து ஆடையாக அணிந்து கொண்டு விலங்கோடு விலங்காக வாழ்ந்து வந்தான். பின்னாளில் காலத்திற்கு ஏற்ப பல வளர்ச்சி நிலைகளைக் கடந்த பின் பட்டிலும,; பருத்தி நூலிலும் பல ஆடைகளை அணிய கற்றுக் கொண்டான்.

நூல் நூற்று ஆடைகளை அணிய பழகினாலும் உடையார் இனத்தைச் சேர்ந்த மக்கள் மேலாடை அணியும் வழக்கத்தை கடைபிடிக்கவில்லை. உடையார் இன மக்கள் வெண்ணிற ஆடையில் மீதும் கடைகள் மீதும் மிகுந்த ஆர்வம் உடையவராக விளங்கினார். இது எனது மகளிர்கள் அக்காலத்தில் தொய்யில் எழுதும் வழக்கத்தை கொண்டிருந்தனர்.

குளிக்கச் செல்லும்போது தங்களது கணவரின் வெண்ணிற வேட்டியை மேலாடையாக அணிந்து கொண்டனர். நாள்தோறும் சேலை அணிந்து இருப்பினும் ரவிக்கைக்கு பதிலாக தொழில் எழுதிக் கொண்டனர் தங்களது மார்பகத்தை மறைப்பதற்கு தொழில் எழுதிக் கொண்டனர்.

ஐய பிதிர்ந்த சுணங்கனரி

மென்முலைமேல் தொய்யில் எழுதுகோ

(முல்லைக்கலி, 11: 16 - 17)

என்ற பாடல் அடிகளின் மூலம் துயில் எழுதும் வழக்கத்தினை உடையார் இன மக்கள் பின்பற்றினர் என்பதை உணர முடிகிறது.

திருமணத்தின் போது மட்டுமே ஆண்கள் பட்டு வேஷ்டியும், பட்டு சட்டையும் அணிந்த பெண்களும் குறைபாட்டினை திருமணத்தின்போது அணிய வேண்டும் என்பது வழக்கமாகும். தினசரி உடையாக ஆண்கள் வேட்டியும் துண்டும் அணிந்திருந்தார் பெண்கள் சிலர் ரவிக்கை இன்றி சேலைகள் மட்டும் அணிந்திருந்தனர் இவ்வின மக்கள் இதுபோன்ற தங்களுக்கு பொருத்தமான உடைகளை அணிந்திருந்தனர்.

இன்றைய காலகட்டத்திற்கு ஏற்ப சமுதாயத்தோடு ஒன்றிய பலரது உடை நாகரீகத்தை பின்பற்றினாலும் தங்களுக்கென ஒரு அடையாளத்தை இன மக்கள் இன்றும் தங்களது முன்னோர்களின் வழி பெற்றிருக்கின்றனர்.

இருப்பிடம் சார்ந்த பழக்க வழக்கங்கள்

இருப்பிடம் எனப்படும் உறையூரில் குடியிருக்கும் வீடு என பொருள்படும். குறிஞ்சி நிலத்தில் குறவரும், பாலை நிலத்தில் எயினரும், முல்லை நிலத்தில் இடையரும், மருத நிலத்தில் உழவர் என ஐவகை நிலத்தின் சேர்ந்த மக்கள் தங்களுக்கென உள்ள இருப்பிடத்தை அடிப்படையாகக் கொண்டே அடையாளப்படுத்தப்பட்ட இன மக்களைப் போன்றே உடையார் இன மக்களும் தங்களுக்கு என தனி ஒரு இடத்தினை முந்தை காலமான தங்களது முன்னொரு காலத்தில் பெற்றிருந்தனர்.

இன்றைய காலகட்டத்தில் பல்வேறு காரணங்களால் இன மக்கள் சமுதாயத்தின் வெவ்வேறு இடங்களுக்கு சென்றாலும் தனது தொழிலின் அடிப்படை யிலேயே தங்களுக்கான இடத்தை உருவாக்கிக் கொண்டனர்.

மண் வளம் அதிகம் உள்ள நிலப்பரப்பில் உடையார் இன மக்கள் தங்களது இருப்பிடத்தை ஏற்படுத்திக் கொண்டனர். குடிசை வீடு, ஓட்டு வீடு, மெத்தை வீடு என்ற வீட்டின் அமைப்பை வைத்தே மக்களின் தரத்தையும் சமுதாய மதிப்பிட்டனர் வீட்டின் அமைப்பை வைத்தே உயர்ந்தோர் தாழ்ந்தோர் நடுத்தர வர்க்கத்தினர் என்ற அடிப்படையில் மக்கள் படுத்தப்பட்டனர் இதுபோன்ற வேறுபாட்டினை போலவே உடையார் இனமக்கள் தங்களது இனத்தை அடையாளப்படுத்தும் விதமாக வீட்டினை உருவாக்கினர்.

சுடுமண் ஓங்கிய நெடுநகர் வரைப்பில்

(பெரும்பாணாற்றுப்படை : 405)

என்ற பாடல் அடிகளுக்கு ஏற்ப சுடுமண்ணால் உருவான வீடுகளில் மக்கள் குடியேறி இருந்தனர் இவர்களை வைத்தே இவர்கள் மண்பாண்ட காரர்கள் என்று இவர்களது இனத்தை அறிய வேண்டுமென்பதே இவ்வின மக்களின் நோக்கமாகும். எனவே, மண் வளம் அதிகமாக காணப்படும் இடங்களில் இவ்வின மக்கள் தங்களது இருப்பிடத்தை அமைத்து கொண்டனர்.

தொழில் சார்ந்த பழக்க வழக்கங்கள்

உடையார் இன மக்கள் குயவர் என்றும் மண்பாண்டகாரர்கள் என்றும் அழைக்கப்படுகின்றனர். இன மக்கள் தங்களது தொழிலின் அடிப்படையிலேயே தங்களது வாழ்வாதாரம் அமைய வேண்டும் என்று எண்ணினர். மக்களின் தேவைக்கு ஏற்ப சில மண்பாண்டங்களை உருவாக்குவதற்கு இவ்வின மக்கள் களிமண்ணை உபயோகித்தனர் எழுத்தறிவு தோன்றும் காலத்திற்கும் முற்பட்ட மிகப் பழங்காலத்திலேயே மண்பாண்டங்கள் செய்யும் நுட்பங்கள் கண்டறியப்பட்டன மிகப்பழமையான தொழிலான கருதப்படுவதால் இது தமிழில் என்றும் இதனை செய்பவன் என்றும் அழைக்கின்றனர்.

தொழிலின் மூலமாக கொண்ட மக்கள் தெய்வமாக கருதுகின்றனர் சக்கரத்தின் மீது செய்யப்படும் முதல் மண்பாண்டத்தில் உப்பும் மஞ்சளும் வைத்து தங்களது குல தெய்வத்தினை வழிபடுவதன் இவர்கள் வழக்கமாக கொண்டுள்ளனர் மண்ணாலான பொருள்கள் தெய்வீக தன்மை பெற்றிருப்பதால் தாங்கள் உருவாக்கும் முதல் மண்பாண்டம் தெய்வத்திற்கு உரித்தானது என்று நம்புகின்றனர் வீட்டில் பெண் குழந்தைகள் இருந்தால் தினமும் சற்று முன் சக்கரத்தில் களிமண்ணை சக்கரத்தின் மீது அக்குழந்தையை வைக்கச் சொல்வார்கள்.

அப்பெண் பிள்ளை திருமணமாகி புகுந்த வீட்டிற்குச் செல்லும் வரை உடையார் இன மக்கள் இதனை பின்பற்றுகின்றனர் வழக்கத்தினை ஒரு அதிர்ஷ்டமாக கருதுகின்றனர். ஈரப்பதம் வாய்ந்த மண் சேர்த்து குறைக்கப்பட்ட களிமண்ணை தேவைக்கேற்ப உருவத்தில் வடிவமைத்து அதனை சூளையில் இட்டு பின் வெயிலில் காயவைத்து அதன் வடிவத்தையும் உறுதி செய்வார்கள் சமையல் செய்யப்படும் பொருளாகவும் அலங்காரப் பொருளாகவும் மண்பாண்டங்கள் பயன்படுத்தப்பட்டன. மண்பாண்டங்கள் சூளையில் சுடப்பட்ட பின்பே உபயோகப்படுத்தப்பட்டன இதனை,

இருள் திணிந்த தன்ன குரூ உத்திரன்

பரூஉப்புகை அகலிரு விசும்பின் ஊன்றும் சூளை

(புறம் - 228)

என்ற பாடல் அடிகளின் மூலம் மண்பாண்டங்கள் சுடப்பட்டு உறுதி செய்யப்பட்டனர் என்று அறியமுடிகிறது.

பழங்காலத்தில் இறந்த உடலினைப் புதைப்பதற்கு மண்பாண்டங்களை உபயோகப்படுத்தினர் இறந்த உடல்களை புதைக்கும் போது மண்ணில் ஆன பொருட்களை வைத்துப் புதைப்பதை மக்கள் வழக்கமாக கொண்டிருந்தனர்.

வியன்மலர் அகன்பொழில் ஈமத் தாழி

அகலிதாக வனைமோ

(புறம் - 256)

என்ற முதுபாலை செய்யுளின் வழியாக முதுமக்கள் தாழியின் பயன்பாட்டிற்கு மண்பாண்டங்களை உபயோகத்தில் இருந்தன என்பதை அறியமுடிகிறது மண்ணாலான பொருள்களை அன்றைய தமிழர்கள் அதிகம் பயன்படுத்தி உள்ளனர் என்றும் மண்பாண்டங்கள் செய்யும் கருவிகள் இருந்தன என்பதையும்

அச்சுடைச் சாகரிட்டு ஆரம

(புறம் - 256)

என்ற பாடலடிகளின் மூலம் அறிய முடிகிறது. இன்றைய காலகட்டத்தில் மண்பாண்டங்களை மக்கள் அதிகம் பயன்படுத்துவது இல்லை என்றாலும் கூட அதன் வளர்ச்சியை அதிகரிக்கச் செய்யும் முயற்சியை இன மக்கள் கைவிடாது நம்பிக்கை கொள்கின்றனர்.

மக்களை கவரும் வண்ணம் மண்ணாலான குக்கர் குழாய் பதிக்கப்பட்ட பானைகள் புட்டு செய்வதற்கான குழாய்கள் வண்ணங்கள் பூசி கோலமிட்ட அழகிய மண் சட்டிகள் என பலவிதமான மண்பாண்டங்கள் இவ்வினாத்தார் தயார் செய்கின்றனர்.

மக்கள் இதனை கண்டு பாரம்பரியமான பொருட்களை வாங்குவார்கள் என்று தொழில் உத்தியை கையாண்டனர் பல்வேறு உத்திகளை கையாண்டு கூட அன்று முதல் இன்று வரை இன மக்கள் தொழில் முறையினையும் அதன் பழக்க வழக்கங்களின் மரபு மாற்றாமல் பின்பற்றி வருகின்றனர்.

மண்சார்ந்த கைவினைக் கலைகள்

கைவினைப்பொருட்களானப் பாய் பின்னுதல் மூங்கில் கூடைகள் வனைதல் தஞ்சாவூர் பொம்மைகள் செய்தல் சுடுமண் சிற்பங்கள் வேலைப்பாடுகள் மண்பாண்ட பொருட்கள் செய்தல் மாலைகள் செய்தல் மணிகள் கோர்த்த ஓலை பொருள்களில் பொம்மைகள் செய்தல் போன்ற பலவகைப்பட்ட கைவினைக் கலைகள் உள்ளன கைகளில் மரம் சார்ந்த கலைகள் சார்ந்த கலைகள் காகிதம் சார்ந்த கலைகள் என பலதரப்பட்ட கைவினைக் கலைகள் உள்ளன.

கைவினைக் கலைகள் என்றாலே முதலில் முதலில் சிந்தனைக்கு வருவது மண்பாண்ட பொருட்கள் தான் கிராமப்புற மக்கள் கைவினைப் பொருட்கள் செய்வதில் கைதேர்ந்தவர்களாக விளங்கினர் தலைமுறை தலைமுறையாக தங்களது கலைகள் வளர்ச்சி பெற்று மற்றவர்களும் அதனை அறிந்திட வேண்டும் என்று பல பயிற்சிகளை கைவினைக் கலைஞர்கள் மக்களுக்கு

புகுத்தினர். கிராமப்புறங்களில் இருந்து மக்கள் நகர்ப்புறங்களுக்கு குடியேறினாலும் கூட தங்களது கைவினைக் கலைகளை மென்மேலும் வளர்த்து வருகின்றனர்.

மண் பூச்சட்டி, மண்ணாலான பொம்மைகள், விளையாட்டு சாமான்கள், பானைகள், கார்த்திகை விளக்குகள், விநாயகர், காளி போன்ற தெய்வ சிலைகளும் போன்று பல வகையான பொருள்கள் மற்றவர்களை காட்டிலும் முதன்மை பெற்றவர்களாக விளங்குகின்றனர். மண்பாண்டகாரர்கள் தங்களது தொழிலின் கைத்திறனைக் கைகூட்டி மண்பாண்டங்கள் செய்வதே ஒரு கலையாக மாறிவிட்டது. உடையார் இன மக்கள் நாம் அன்றாடம் வாழ்வில் பயன்படுத்தும் பொருட்களான அடுப்பு மண் சட்டி பானை தானியங்கள் பாதுகாக்கும் மக்கள் போன்ற பொருட்களை செய்துவிடுகின்றனர்.

விநாயகர் சிலைகள் தோண்டி குடம் கலையம் என பலதரப்பட்ட கைவினைப் பொருட்களை இவ்வின மக்கள் கலைநயத்தோடு உருவாக்குகின்றனர். ஏழைகளின் குளிர்சாதனப்பெட்டி என்றழைக்கப்படும் மண்பானைகளில் சமைப்பதில் பதப்படுத்தப்பட்ட சோறும் மருத்துவ குணம் வாய்ந்தவை ஆகும். ஆரோக்கியம் மட்டுமின்றி இசையும் இக்கலைஞர்களால் வளர்ச்சி பெற்றன மத்தாளம் மண்ணாலான நாதஸ்வரம் கடம் போன்றவைகள் செய்து இசைக் கலைஞர்களிடம் விற்கின்றனர்.

சுடுமண் சிற்பக் கலைகள்

சிற்பக்கலை செய் பொருட்களில் ஒன்று மண் என்று திவாகர நிகண்டு

கல்லும் உலோகமும் செங்கலும்
மரமும் மண்ணும் சுதையும்
தந்தமும் வண்ணமும் கண்ட
சருக்கரையும் மெழுகும் என்றிவை
பத்தே சிற்பத் தொழிலுக் குறுப்பாவன
(திவாகர நிகண்டு, ப.199:1-4)

என்ற பாடல் அடிகளின் மூலம் எடுத்துரைக்கிறது மண்ணால் செய்த சிலைகளை வடித்து வழிபடுவது தமிழகத்தில் தொன்றுதொட்டு வழக்கங்களில் ஒன்று ஆகும். அய்யனார், முனியப்பன் கருப்புசாமிக்கு குதிரை, யானை, வேட்டை நாய் போன்ற தெய்வங்களும் அதன் வாகனங்களும் உடையார் இன மக்கள் கலைத் திறனுடன் செய்து வருகின்றனர்.

இவ்வின மக்கள் கலைத்திறன் மக்களின் வழிபாடு மற்றும் வாழ்வியலோடு பிரிக்கமுடியாத வழக்கங்களில் ஒன்றாகும். கை, கால் போன்ற உறுப்புகளில் ஏதேனும் பாதிப்பு ஏற்பட்டால் குணமடைய தெய்வத்திடம் வேண்டிக்கொள்கின்றனர.; குணமடைந்த பின் உடல் உறுப்புகளை மண்ணால் வடித்து நேர்த்திகடனாக செய்கின்றனர் நேர்த்திக்கடன் செலுத்தும் மக்கள் சுடுமண் உருவங்களை பயன்படுத்தினர் என்பதை இதன் மூலம் அறிய முடிகிறது.

முடிவுரை

ஆதி காலம் முன்னோர்கள் முதல் இன்றைய காலத்து இளைய தலைமுறையினர் வரை உணவு, உடை, இருப்பிடம் என்பது தங்களது வாழ்;நாளில் இன்றிமையாததாகும். தமிழ் மரபின்

வரலாற்று பெட்டகமாக விளங்கும் மண்பாண்டங்களை புனையும் இவ்வினத்தார் தங்களது பழக்கவழக்கங்களையும், நம்பிக்கையினையும் இன்றைய இளம்தலைமுறையினரிடம் மரபுடன் கொண்டு சேர்ப்பதையே முதன்மையாக கொண்டிருக்கின்றனர் என களஆய்வின் மூலம் அறிய முடிகிறது.

துணைநூற்பட்டியல்

1. முனைவர்.ச.வே.சுப்பிரமணியன்.தொல்காப்பியம் முழுவதும்.மெய்யப்பன்பதிப்பகம்,சிதம்பரம் - 608001.முதல்பதிப்பு - ஜீன் 2008

2. சுக்திதாசன் சுப்ரமணியன். கலித்தொகை மூலமும் விளக்கமும். அன்பு வெளியீடு, புதுச்சேரி. முதல்பதிப்பு - மார்ச் 1958

3. இரா.இளங்குமரனார். அறிமுக நூல் - 6 பெரும்பாணாற்றுப்படை. புரட்சிக் கவிஞர் மன்றம், 75, வடக்குமாசி வீதி, மதுரை-1

4. ஔவை சு.துரைசாமிப்பிள்ளை.புறநானூறு பகுதி 1.சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்,சென்னை-18.முதல் பதிப்பு-1947.

5. திவாகரர். சேந்தன் திவாகரம். ஆமெரிக்கன் மிசியோன் அச்சுக்கூடம், சென்னை. முதல்பதிப்பு - 1840.

References

1. *Dr. S. V. Subramanian. Tolkappiyam Muzhuvathum (Complete Tolkappiyam). Meyyappan Publications, Chidambaram — 608001. First Edition, June 2008.*
2. *Sakthidasan Subramanian. Kalithogai: Original Text and Commentary. Anbu Publications, Puducherry. First Edition, March 1958.*
3. *R. Ilangkumaranar. Introduction Series — 6: Perumpanarruppadai. Puratchi Kavignar Manram, 75, North Masi Street, Madurai — 625001.*
4. *Olvai S. Duraisamy Pillai. Purananuru, Part I. Saiva Siddhanta Publishing Society, Chennai — 600018. First Edition, 1947.*
5. *Divakarar. Senthan Divakaram. American Mission Press, Chennai. First Edition, 1840.*

நேர்காணல்

1. ***லட்சுமி, வயது 74, தாராபுரம், திருப்பூர்.***
2. ***திருப்பூர் மாநகராட்சி, 05.03.2024.***

Field Interview

1. ***Lakshmi, Age 74, Dharapuram, Tiruppur.***
2. ***Field Interview, Tiruppur City Municipal Corporation, 5 March 2024.***

yl;Rkp> taJ 74> jhuhGuk;> jpUg;G+H. NeHfhzy; (12.01.2022)

ARAN International e-Journal of Tamil Research
அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.

வரும் 2026, அக்டோபர் மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள் - அக்டோபர் 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் அக்டோபர் இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com